**செ.வெ.எண்: 61** **நாள்: 28.10.2021**

## பத்திரிக்கைச் செய்தி

போர் விதவைகள் நலச் சங்கத்தினால் சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் நடத்தப்பட்டு வரும் நிம்மதி இல்லத்தில் வயது முதிர்வடைந்த / ஆதரவற்ற முன்னாள் படைவீரரின் கைம்பெண்களுக்கு உணவு, மருத்துவ சிகிச்சை மற்றும் படுக்கை வசதிகள் சிறந்த முறையில் செய்து தரப்பட்டுள்ளது. வயது முதிர்வடைந்த / ஆதரவற்ற முன்னாள் படைவீரரின் கைம்பெண்கள் இந்நிம்மதி இல்லத்தில் சேர்ந்து பயனடையுமாறும், மேலும் விவரங்கள் அறிய நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத் தரைத்தளத்தில் அறை எண். 10 மற்றும் 11-ல் இயங்கி வரும் முன்னாள் படைவீரர் நல உதவி இயக்குநர் அலுவலகத்தினை நேரில் தொடர்பு கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**